**தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் நிதிக்கூற்றுக்களின் தமிழ் மற்றும் ஆங்கில பிரதிகள் 2020 யூன் 24 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக வருடாந்தம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் வரியல்லாத வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகளாக ரூபா 24,627,933 காட்டப்பட்ட போதும், திறைசேரிக் குறிப்புக்களின் பிரகாரம் வரியல்லாத வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 25,166,632 என அவதானிக்கப்பட்டது. | நிதிச் செயலாற்றல் சுற்று தயாரிக்கும் போது திறைசேரிக் குறிப்புக்களின் பிரகாரம் வருமானம் காட்டப்பட வேண்டியமை. | இத்திணைக்களத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-06 தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 24,644,545 என்பதுடன் வருமானத்தில் மீளச் செலுத்தியமை 16,612 ஆகும். இதன் பிரகாரம் தேறிய வரியல்லாத வருமானம் ரூபா 24,627,933 ஆகும். |
| (ஆ) நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் திறைசேரிக் கட்டுநிதிப் பெறுவனவுகளாக ரூபா 734,659,232 காட்டப்பட்டதுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் திறைசேரிக் கட்டுநிதியாக ரூபா 772,500,000 பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களப் புத்தகங்கள் மற்றும் பொழிப்புக்கள் திறைசேரிக் குறிப்புக்களுடன் மாதாந்தம் இணக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சுற்றறிக்கைகள் அறிவுறுத்தலின் படி ஏனைய திணைக்களங்களுக்காக சேர்க்கப்பட்டிருந்த வருமானங்கள் ரூபா 62,159,232 ஆன தொகை திறைசேரியிடம் பெற்ற கட்டு நிதியுடன் சேர்க்கப்பட்டு கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அத்தொகை ரூபா 734,659,232 ஆகும். |
| (இ) நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் முற்பணம் பெறுவனவுகளாக ரூபா 46,598,697 காட்டப்பட்டிருந்ததுடன் திறைசேரிக் குறிப்புக்களின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 49,238,854 ஆக அவதானிக்கப்பட்டது. | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது திறைசேரிக் குறிப்புக்களின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் காட்டப்பட வேண்டியமை. | ஏனைய திணைக்கள முற்பண ''பீ'' கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட விடயங்கள் என்பதுடன் இக்கட்டு நிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முற்பணக் கொடுப்பனவுகளாக ரூபா 75,542,998 காட்டப் பட்டிருந்தமையுடன் திறைசேரிக் குறிப்புக்களின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 72,825,105 ஆக அவதானிக்கப்பட்டது. | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது திறைசேரிக் குறிப்புக்களின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் காட்டப்பட வேண்டும். | ஏனைய திணைக்கள முற்பண ''பீ'' கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட விடயங்களின் கூட்டுத்தொகை என்பதுடன் இது கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டது. |

### 1.6.3 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் தவறாது பரிசோதனை செய்யக் கூடிய முறையில் பொறுப்புக்கள் பதிவேடொன்றில் அப்பொறுப்புக்கள் குறிப்பிடப்பட வேண்டியமை. | பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டு சம்பந்தமாகப் பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்துப் பேணப்பட்டு வருவதாக பிரதான | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உதவியுடன் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் மூலம் தொடர்ந்து உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக மீளாய்விற்கு உட்படுத்தப்படும். |

| | |
|---|---|
| கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும், முறைமையின் பயனுறுதி தொடர்பாக காலத்துக்காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டியமையுடன் அம்மீளாய்வு ஒன்று எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.6.5 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்பட்டுள்ளன.

| | **அவதானிப்புக்கள்** | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு** | **இணங்காமை** | | |
| (அ) | 2009 இன் 22 ஆம் இலக்க விலங்குகள் மற்றும் பாதுகாப்பு (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டத்தின் 9(3)(க)(ச) | தமனேயாய நீதிமன்றத்திற்கு அருகில் கிரிதலே சரணாலயத்தில் பெருமளவிலான குப்பைகள் கொட்டப்பட்டிருந்தமையால் காட்டு யானைகள் மற்றும் பிற விலங்குகள் குப்பைகளைச் சாப்பிடுவதைக் காண முடிந்தது. திணைக்களம் இது தொடர்பாக எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. | பெறப்பட்டிருந்த 600 அளவான நாற்றுக்களை சம்பந்தப்பட்ட நிலத்தில் நாட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | இந்த இடத்தில் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலையீட்டால் இற்றை வரையில் கிராமவாசிகளின் உதவியுடன் மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. எனவே எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுப்பதற்கான தேவையில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>---------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | விநியோகிக்கப்பட்டும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,794,263 ஆன 127 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் தக்க வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நி.பி 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 103(1) | 2017 ஆம் ஆண்டில் கால்வ்ஸ்லேன்ட் முகாமில் வைக்கப்பட்டிருந்த ரூபா 17,918 ஆன நீர் மோட்டார் இயந்திரம் திருத்தப்பட்டமை மற்றும் பதுலுலெகக் காட்டுப் பாதுகாப்பு அலுவலகத்தின் சூழலில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த 688 மின் வேலிக் கம்பங்கள், 30 ஆதரவுக் கம்பங்கள் மற்றும் 30 மொத்தக் கம்பங்கள் தீப்பிடித்துச் சேதமைந்தமை சம்பந்தமாக நி.பி 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (இ) | 2018 ஒக்டோபர் 17 ஆந் திகதிய PS/SP/PC/MO/14/2018 ஆம் இலக்க சனாதிபதிச் செயலக சுற்றறிக்கை | திணைக்களத்தின் தலைமைக் காரியாலயக் கட்டிடத்திற்கு உரித்தான காணியின் உரிமை சம்பந்தமாக கிராமிய அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஏற்பட்ட பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தலைமைக் காரியாலயக் கட்டிடத்திற்கு உரித்தான காணியின் உரிமை சம்பந்தமான கவனம் எடுக்கப்படுவதுடன் அமைச்சின் தலையீட்டின் கீழ் கிராமிய அபிவிருத்தி அதிகார சபையுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2018 இன் திசெம்பர் 26 ஆந் திகதிய 10/2018 ஆம் இலக்க வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் சுற்றறிக்கை | திணைக்களத்தில் காணப்பட்ட அனைத்து குழாம் வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் மாதத்திற்கொரு தடவை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற பதவி நிலை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பரிசோதனை ஒன்று நடாத்தப்படாமை அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் நிர்வாகம் மற்றும் பணிப்பாளர் பொறியியலாளர் உள்ளடங்கிய குழுவொன்று 2019 சனவரி மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாதத்திற்குமாக வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டன. இப்பரிசோதனை நடவடிக்கையை முறையாக நடாத்திச் செல்லப்படுவதற்கு குழுவிற்கு மீண்டும் அறிவுறுத்தல் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலாத்துறை விடுதிகள் 05 ஆனது 2 வருட காலமாகத் திருத்த வேலைகள் சம்பந்தமாக மூடப்பட்டிருந்த காரணத்தினால் அச் சுற்றுலாத்துறை விடுதிகளில் வருமானம் பெறப்பட முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சுற்றுலாத்துறை விடுதிகள் விரைவாக பாவனைக்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | வனவிலங்குகள் அறக்கட்டளையால் ஹோட்டன் சமவெளி மற்றும் யால தேசிய பூங்காக்களில் நடாத்தப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலைகளுக்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 வருடம் வரையில் நிலுவைக் கட்டிட வாடகை | வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டியதுடன் நிலுவைத் தொகை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

வருமானம் ரூபா 9,300,000 என்பதுடன் அத்தொகையை அறவிடப்படுவதற்கு முடியாமல் இருந்தது.

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இற்கு இணங்க வருடாந்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2019 வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 03 செலவு விடயங்களுக்காக நூற்றுக்கு 50 தொடக்கம் 100 வீதம் வரையான வீச்சில் சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | காணிப் பிரச்சினைகள் மற்றும் அதிக மழை காரணமாக நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமை மற்றும் நீர்த்தேக்கங்களின் புனரமைப்பு சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரின் தாமதங்கள் மற்றும் பலத்த மழை வீழ்ச்சி பெறப்பட்டமையால் தெருக்களுக்கான பிரவேசங்கள் தடை செய்யப்பட்டமை. |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டிய முறையில் காட்டப்பட்டுள்ள போதிலும், மரணித்த, ஓய்வூதிம் பெற்றுச்சென்ற, சேவையிலிருந்து விலகிச் சென்ற மற்றும் வேலையிலிருந்து நீக்கப்பட்ட 58 உத்தியோகத்தர்களின் ரூபா 3,524,852 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிக் காணப்பட்டன. தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் | தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கடன்கள் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் அத்தொகையை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையுடன் அவற்றுள் 5 வருடங்களிற்கு மேற்பட்ட கடன் மிகுதி ரூபா 1,098,477 ஆகும்.

### 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2011 ஆம் வருடத்திலிருந்து 2017 வருடம் வரையில் நிர்மாண ஒப்பந்தங்களின் தக்க வைக்கப்பட்டிருந்த ரூபா 47,313,910 ஆன மிகுதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட மிகுதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 18 செயற்திட்டங்களுக்காக ரூபா 27,525,000 ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவை செயற்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட 22 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 இற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தொடங்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் குறிப்பிட்டகால எல்லைக்குள் முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.3 செயற்திட்டங்கள் முடிவுறாது கைவிடப்பட்டமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதுறுஓயா தேசிய பூங்காவில் உலுகேதங்கொடா வாவி மற்றும் ஹெவ்மெமெகலா வாவிகளின் புனரமைப்பிற்காக முறையே ரூபா 2,955,970 மற்றும் ரூபா 4,000,038 ஆன வரியற்ற தொகைக்கு 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியில் சயீன் கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும், இவ்வேலை முடிவுறாது ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட தரப்பினர் தொடர்பாக சட்ட அடிப்படையின் நடடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இரண்டு வாவிகளினதும் மறுசீரமைப்பு நடவடிக்கை முடிவுறாமையுடன் மறுசீரம்பு நடவடிக்கை நிறுத்தப்பட்டு வருடத்திற்கும் கூடிய காலம் கழிந்துள்ளது. |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,343,049 செலவிடப்பட்டு மாதுறுஓயா தேசிய பூங்காவின் கட்டப்பட்டிருந்த சுடுநீர் குமிழி முகாம் கட்டிடமானது 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விளைவற்றுக் காணப்பட்டது. | இக்கட்டுமானத்திற்காக சுற்றுலாப் பிரயாணிகளை ஈர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் இம்முகாமினைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தல் தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஒன்று பூங்காப் பொறுப்பாளரிடமிருந்து (மாதுறுஓயா) கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டிருந்த ரூபா 4,020,610 ஆன அம்பகோலாராவிலிருந்து குடா ஓயா வரையிலான (10.5 கி.மீ) மற்றும் கண்டன் வேவா முதல் மீகாஸ் வேவா வரையான (10 கி.மீ) ஆகிய இரண்டு மின்சார வேலிகளைப் பராமரித்து நடாத்திச் செல்வதற்கு சிவில் பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கவில்லை. | மின்சார வேலிகளைப் பராமரித்து நடாத்திச் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (இ) | 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,129,335 செலவிடப்பட்டுக் கட்டப்பட்ட கால்வ்ஸ் லேன்ட் தேசிய பூங்காவின் தள முகாம் 2020 பெப்ரவரி வரையில் சுற்றுலாத் துறையினருக்காக திறக்கப்படாது குறைப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட பிரதேசத்தினை சுற்றுலாத் துறையினருக்காக திறக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும். |
| (ஈ) | கெப் வாகனமொன்று ரூபா 1,261,286 ஆன தொகைக்குப் பழுதுபார்த்தல் தொடர்பாக பெறுகை நிறுவனத்தில் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பழுதுபார்த்தல்கள் | இக்கெப் வாகனத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் குப்பைகளை வெளியேற்றும் பணிக்கு மட்டுமே கவனம் கோரப்பட்டபோது பெறுகை நோக்கமான பணத்திற்கான |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட வாகனத்தின் ஓட்ட நிலைமை, கொள்வனவு செய்யப்பட்ட வருடம், சந்தைப் பெறுமதி, எதிர்காலப் பராமரிப்புச் செலவுகள் போன்ற காரணிகளுக்கான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் படவில்லை. அத்துடன் பழுதுபார்த்தலின் போதான பொருளாதார நன்மைகள் சம்பந்தமான தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 இல் குறிப்பிட்டதன் பிரகாரம் பணத்திற்கான பெறுமதி தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படவில்லை. மேலும், பழுதுபார்த்தலுக்கு 2 வருடங்கள் 8 மாதங்கள் எடுக்கப்பட்டிருந்தது. | விரைவில் நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பெறுமதி உச்சப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பழுதுபார்த்தல்கள் மேற்கொள்வதின் தாமதத்திற்கு பிரதான காரணம் யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனம் மிகவும் மந்த கதியில் பழுதுபார்த்தமை மேற்கொண்டமை. |
| (உ) | 2016 ஆம் ஆண்டில் யால தேசிய பூங்கா தொடர்பாக 02 Ticket Vending Machine, 3 Mini PC மற்றும் 01 19” Mini PC Tray 2U ஆனவை ரூபா 2,205,526 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 2020 செப்டம்பர் வரையில் அவை பாவனைக்குட்படுத்தப்படாது விளைவற்றதாகக் காணப்பட்டன. | இயந்திரங்களைப் பாவனைக் குட்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஊ) | யானை வேலியின் உடைப்பைக் குறைப்பதற்காக மின்சார வேலிக்கு இணையாகப் பயன்படுத்துவதற்காக ஹோரவப்பொத்தானை யானைத் தடுப்பு மத்திய நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 321,301 பெறுமதியான 43 Concertina Razor Barbed கம்பி ரோல் 2020 செப்டம்பர் வரையில் பாவனைக் குட்படுத்தப்படாது இருந்தன. | தேவைகளை இனங்கண்டு கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டியமை. | கம்பி ரோல் பயன்படுத்தப்படும் போது நட்டமேற்பட முடியுமென்பதை உணர்ந்ததன் காரணத்தினால் மின்சார வேலிகளுக்காகக் கம்பி கோரல்களின் பயன்பாடு நிறுத்தப்பட்டுள்ளமையுடன் மிகுதிக்கம்பித் தொகை அலுவலகச் சூழலில் களஞ்சியப்படுத்தப்பட்டன. |

## 3.5 இழப்பீடுகள் மற்றும் நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கிழக்கு வலயத்தில் கட்டப்பட்ட 7 மின்சார வேலிகள், ரூபா 1,546,000 ஆன மின்சார உபகரணங்கள் திருடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இது தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | நட்ட இழப்புக்களுக்கான பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத நட்டங்களின் எண்ணிக்கை 07 என்பதுடன் அவற்றின் நட்டத்தின் பெறுமதி ரூபா 2,857,600 ஆகும். | வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உரிய பெறுமானங்கள் உள்ளடக்கப்பட வேண்டியமை. | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. |

## 3.6 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | லாஹுகல தேசிய பூங்காவின் எல்லைகளை அளவிடுதல் மற்றும் சட்டரீதியான திட்டமொன்றைத் தயாரிக்கப்படுவதற்காக 2017 யூலை 25 ஆந் திகதி ரூபா 2,925,600 ஆன தொகை அம்பாறை சிரேஷ்ட நில | எல்லைகளை அளவிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுத் தேவையான எல்லைக் கணுக்கள் அமைத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2020 பெப்ரவரி 05 ஆந் திகதியிலிருந்து 2020 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் நில அளவையாளர் திணைக்களத்தினால் அளத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | அளவையாளர் அதிகார சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதி வரையில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. இவ்வாறு இருக்கையில் எல்கைக்கணுக்கள் அமைப்பதற்காக 2019 ஒக்டோபர் 31 ஆந் திகதி பனாமா மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்துடன் ரூபா 363,921 ஆன தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மாதுறு ஓயா தேசியப் பூங்காவின் இத்தபொல பதவலயாயப் பிரதேசத்தில் 10,000 தேக்கு மரங்கள் வெட்டப்படுவதற்காக 2013 வருடத்திலிருந்து வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையில் செயற்திட்டத்திற்கான இறுதிச் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு தேக்கு மரங்கள் வெட்டப்படுவதற்கான வேலைகள் விரைவில் முறையாகச் செய்யப்பட வேண்டியமை. | 2020 சனவரி மாதம் அளத்தல் நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மரக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான மரங்கள் நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குள் 407 யானைகளின் மரணங்கள் அறிக்கையிடப்பட்டிருந்த துடன் அவற்றுள் 79 ஆனவை வெடி வைக்கப்பட்ட தென்பதுடன் 117 ஆனவை மின்சாரம் தாக்கியமை மற்றும் | மனிதர்களின் செயற்பாடுகளினால் ஏற்படுகின்ற யானை மரணங்களை கட்டுப்படுத்துதலை விரைவாகச் செயற்படுத்த வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

விபத்துக்களால் ஏற்பட்ட மரணங்களாகும். இந் நிலைமையைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 4. நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் நிலையான அபிவிருத்திக் குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்தமையுடன் அவற்றை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அதன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சிரேஷ்டமட்டத்திலான வெற்றிடங்கள் 14 உள்ளடங்கலாக திணைக்களத்தின் ஒட்டுமொத்த பதவியணியினரின் வெற்றிடங்கள் 867 ஆகும். | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |